# முன்னுணர்வுக் கருத்தறிதல்

கரையோரப் பூந்தோட்டத்தில் பல நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட மலர்ச்செடிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மக்கள் அவற்றை (1)______________________ கூடினார்கள். அவர்கள் அங்கிருந்த மலர்களின் எழிலை ரசித்துக்கொண்டிருந்தார்கள் திடீரென்று, வானிலிருந்து விண்கலம் பூந்தோட்டத்தை நோக்கி வந்தது. பூந்தோட்டத்தில் இருந்த அனைவரும் செய்வதறியாது (2)______________________ ஒரு நின்றார்கள். விண்கலத்திலிருந்து கண்ணைப் பறிக்கும் ஒளி வந்தது; காதை அடைக்கும் பயங்கரச்சத்தம் கேட்டது. அங்கிருந்தவர்கள் அவர்களுடைய காதையும் கண்ணையும் இறுக மூடிக்கொண்டார்கள். சிறிது நேரத்தில் ஒளி (3)______________________ போனது. அந்த இடமே இருட்டானது. அனைவரும் கண்ணை மெல்ல (4)______________________ பார்த்தார்கள். அவர்களுடைய கண்ணை அவர்களால் நம்பவே முடியவில்லை. பூந்தோட்டத்திலிருந்த அத்தனை மலர்ச்செடிகளும் அங்கு இல்லை.

LIVEWORKSHEETS